# இராணுவ வீரர்களுக்கும், பொதுமக்களுக்குமிடையிலான முரண்பாடு: ஒலுவில் காசான்கேணி காணியை மையப்படுத்திய ஆய்வு

எஸ். எம். அய்யூப் இஸட்.சித்தி ஹுமைஸர்
சமூகவியல் பிரிவு
சமூக விஞ்ஞானங்கள் துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில் இலங்கை
E-mail:ayoobsm2004@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

ஒலுவில் முதலாம் குறிச்சியான அஷ்ரப் நகருக்குள் உள்ளடங்கும் ஒரு பிரிவே காசான்கேணி என்னும் காணியாகும். இங்கு ஒலுவில் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஆண்டாண்டு காலமாக் குடியிருந்து வந்ததோடு, நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டும், சேனைப்பயிர்ச் செய்கை மற்றும், உபபயிர்ச் செய்கையை செய்தும் தங்களது ஜீவனோபாயத்தை நடத்திக்கொண்டு வந்தனர். இந்நிலையில் 2011.11.05 ஆம் திகதியன்று திடீரென இவர்களது காணிகளில் இராணுவங்கள் குவிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இத்திடீர் நடவடிக்கை இங்கு வாழ்ந்த பொதுமக்களுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கக் காரணமாயிற்று. இந்நடவடிக்கையினால் இங்கு வாழ்ந்துகொண்டிருந்த 69 குடும்பங்களைச் சேர்ந்த மக்களும் தங்களது 62.4 ஹெக்டயர் பரப்புடைய காணிகளை இழக்க நேர்ந்தது. இதனால் இருப்பிடங்களை இழந்த மக்கள் ஒலுவிலுள்ள தங்களது சொந்தங்களின் வீட்டிற்கு இடம்பெயர்ந்ததோடு, தங்களது தொழிலையும் இழந்தனர். இதனால் இம்மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு காணிகளை இழந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிதலைப் பிரதான நோக்கமாகக் கொண்ட இவ்வாய்விற்கான தரவுகள் 1ஆம், 2ஆம் நிலைத் தரவுச் சேகரிப்பு நுட்பமுறைகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தரவுகளில் இருந்து பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது காணிகளை இழந்த மக்கள் குடியிருப்பு, மற்றும் தொழில் சார்ந்த இழப்புக்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருவதோடு, இதனால் பிறரில் தங்கியிருத்தல் வறுமை போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் என்பதை இவ்ஆய்வு கண்டறிந்து கூறுகின்றது. இதிலிருந்து, மக்கள் விரும்பக்கூடிய தீர்வொன்று விரைவில் எட்டப்படுவது அவசியம் என்றும், மாற்றுக்காணிகள் வழங்கப்படுவதாயின் மக்கள் விரும்பக்கூடிய வகையிலும், அவர்களது இழப்பிற்குச் சமமான வகையிலும் காணிகள் வழங்கப்படுவதோடு, அவர்களது இருப்பிடம், தொழில் போன்றவற்றிற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும் போன்ற தீர்வுகளை இவ் ஆய்வு முன்வைக்கின்றது

பிரதான சொற்கள் : முரண்பாடு, காணிச் சுவீகரிப்பு, குடியிருப்பு இழப்பு, தொழில் இழப்பு